# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR

## O.S. No. 558/2004

Deposition of P.**W.-3** witnesses for Plaintiff / Defendant Solemnly affirmed by Tmt. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 07.08.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : சங்கர் | Father's Name | : காசி |
| Village | : ஆறகளூர் | Taluk | : தலைவாசல் |
| Calling | : செயல்அலுவலர், காமநாதீஸ்வரர் திருக்கோவில் | Age | : 45 |

துவக்க நேரம் : 12.08P.M

**வாதிகள் தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி**:

1. நான் தற்பொழுது தேவியாக்குறிச்சி அருள்மிகு சிதம்பரேஸ்வரர் வகையறா திருக்கோவில் செயல் அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆறகளூர் திருக்கோவில் எனது கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க ஆஜராகியுள்ளேன். அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை இன்று நீதிமன்றத்திற்கு கொண்டு வந்துள்ளேன். வழக்கு கோவில்களான நாவக்குறிச்சி கிராமத்தில் உள்ள மாரியம்மன் திருக்கோவில், அய்யனார் திருக்கோவில், எல்லைக் காளியம்மன் திருக்கோவில் ஆகிய 3 கோவில்களும் எனது கட்டுப்பாட்டில் உள்ளது. மேற்கண்ட 3 கோவில்களும் எந்த ஆண்டிலிருந்து இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது என்றால் கடந்த 1974-ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது.

2. மேற்படி கோவில்களுக்கு சொந்தமாக சொத்துக்கள் உள்ளது. அந்த சொத்துக்கள் யார் மூலம் ஏலம் விடப்படுகிறது என்றால் செயல் அலுவலரான நான்தான் அந்த பணியை செய்து வருகிறேன். கடந்த 16.09.2021 அன்று இந்து சமய அறநியைலத்துறை உதவி ஆணையர் அவர்களின் செயல்முறை ந.க.எண். 3463-112/2020/ஆ2-ன் படி நாவக்குறிச்சி, அருள்மிகு அய்யனார் திருக்கோவிலுக்கு என்னை தக்கராக நியமனம் செய்த ஆணையை தாக்கல்

செய்கிறேன். அந்த ஆவணம் **<u>சாட்சி சான்றாவணம் 3(Ex.X3</u>**)-ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 16.09.2021 அன்று இந்து சமய அறநியைலத்துறை உதவி ஆணையர் அவர்களின் செயல்முறை ந.க.எண். 3463-110/2020/ஆ 2-ன் படி நாவக்குறிச்சி, அருள்மிகு எல்லைக் காளியம்மன் திருக்கோவிலுக்கு என்னை தக்கராக நியமனம் செய்த ஆணையை தாக்கல் செய்கிறேன். அந்த ஆவணம் **<u>சாட்சி சான்றாவணம் 4(Ex.X4)</u>**-ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 16.09.2021 அன்று இந்து சமய அறநியைலத்துறை உதவி ஆணையர் அவர்களின் செயல்முறை ந.க.எண். 3463-102/2020/ஆ 2-ன் படி நாவக்குறிச்சி, அருள்மிகு மாரியம்மன் திருக்கோவிலுக்கு என்னை தக்கராக நியமனம் செய்த ஆணையை தாக்கல் செய்கிறேன். அந்த ஆவணம் **<u>சாட்சி சான்றாவணம் 5(Ex.X5)</u>**-ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் எவ்வளவு நாட்களாக மேற்படி கோவில்களுக்கு செயல் அலுவலராக பணிபுரிந்து வருகிறேன் என்றால் கடந்த 09.06.2023 முதல் பணிபுரிந்து வருகிறேன். நான் தாக்கல் செய்துள்ள மேற்படி ஆவணங்கள் கடந்த 16.09.2021 அன்று இந்து சமய அறநிலையத்துறை பிறப்பித்த உத்தரவு என்றால் சரிதான். தாவா கோவில்களில் எல்லைக் காளியம்மன் கோவிலை நான் பார்த்துள்ளேனா என்றால் அப்படியொரு கோவில் அங்கு இப்பொழுது இல்லை, ஆனால் எல்லைக்காளியம்மன் கோவில் சொத்துக்கள் உள்ளதாக ஆவணங்களில் உள்ளது.

2. தாவா கோவில்களில் அய்யனார் கோவில் எங்கு உள்ளது என்றால் நாவக்குறிச்சியில் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்திற்கு எதிரில் செல்லும் ரோட்டில் அமைந்துள்ளது. அந்த கோவில் ரோட்டை ஒட்டினாற்போல் அமைந்துள்ளதா என்றால் ஆமாம். அந்த கோவிலை சுற்றி யார் யார் நிலம் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி அய்யனார் கோவிலை நான் பார்த்ததில்லை என்றாலும், யூகத்தின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல, பார்த்துள்ளேன். நான் அந்த கோவிலை நேரில் பார்க்காததால்தான் அந்த கோவில் எங்கு அமைந்துள்ளது என்று சரியாக கூறமுடியவில்லை என்றால் சரியல்ல.

3. மேற்படி கோவில்களுக்கு இந்து அறநிலையத்துறை சார்பில் கோவிலின் விழாக்களுக்கோ, புனரமைப்பிற்கோ நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்றால் ஆவணங்களின்

அடிப்படையில் இல்லை. அதேபோல் நான் பணியில் சேர்ந்த பின்பும் எந்த நிதியும் ஒதுக்கப்படவில்லை என்றால் மேற்படி கோவில்களுக்குண்டான நிலங்களை பாதுகாக்க வேண்டி கற்கள் அமைப்பதற்காக செலவிடப்பட்டுள்ளது.

4. மேற்படி கோவில்களுக்கு உண்டான சொத்துக்களை ஏலம் விடுவதற்காக வாதி ராஜகோபால் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்த பின்னிட்டுதான் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது என்றால் சரிதான். அதற்கு முன்பு மேற்படி நிலங்கள் ஏலம் விடப்படவில்லை என்றால் சரிதான். எனது இருப்பு அலுவலகம் எங்கு உள்ளது என்றால் ஆறகளூர் காமநாதீஸ்வரர் திருக்கோவிலில் உள்ளது. மேற்படி கோவிலுக்கு எந்த ஆண்டு திருவிழா நடைபெற்றது என்றால் கடந்த 2020-ஆம் ஆண்டு நடைபெற்றது.

5. மேற்படி காமநாதீஸ்வரர் திருக்கோவிலுக்கு 16 கரைக்காரர்கள் உள்ளனர் என்றால் சரிதான். ஆறகளூரில் உள்ள அம்பாயிரம்மன் திருக்கோவில், அய்யனார் திருக்கோவில் ஆகிய 2 கோவில்களும் காமநாதீஸ்வரர் கோவிலில் இணைந்த கோவில்கள் என்றால் இல்லை. கரைக்காரர்கள் என்பவர்கள் பரம்பரையாக வருபவர்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் கோவில் திருவிழாக்கான அழைப்பிதழ் கடந்த 23.07.2025 முதல் 01.08.2025 வரை அம்பாயிரம்மன், அய்யனார் திருக்கோவில்களில் நடைபெற்ற திருத்தேர் திருவிழாக்கான அழைப்பிதழ் என்றால் சரிதான். மேற்படி அழைப்பிதழ் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. என்னிடம் காட்டப்படும் கோவில் திருவிழாக்கான அழைப்பிதழ் கடந்த 31.03.2025 முதல் 13.04.2025 வரை அருள்மிகு காமநாதீஸ்வரர் திருக்கோவிலுக்கு ரத உற்சவ தேர்திருவிழா நடைபெற்றதற்கான அழைப்பிதழ் என்றால் சரிதான். மேற்படி அழைப்பிதழ் **பி.வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் செயல் அலுவலர் என எனது பெயர் இடம் பெற்றுள்ளது என்றால் சரிதான். மேற்படி அழைப்பிதழின்படி திருவிழாவை நடத்துவது கரைக்காரர்கள், ஊர் முக்கியஸ்தர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் என்றுதான் உள்ளது என்றால் சரிதான், ஆனால் மேற்படி கோவிலின் திருவிழாவை நடத்தியதே இந்து சமய அறநிலையத்துறைதான்.

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.558/2004, Dt.07.08.2025.

7. மேற்படி திருவிழாவை நடத்துவதற்கு எவ்வளவு தொகை செலவிடப்பட்டது என்றால் தோராயமாக சுமார் 5 லட்சம் செலவிடப்பட்டது. மேற்படி 5 இலட்சத்தில் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் எவ்வளவு தொகை வழங்கப்பட்டது என்றால் மொத்த தொகையும் இந்து சமய அறநிலைத்துறைதான் செலவிட்டது. மேற்படி திருவிழாவை கரைக்காரர்களோ, ஊர் பொதுமக்களோ எந்த தொகையும் வழங்கி திருவிழா நடத்தப்படவில்லை என்றால் திருவிழாவிற்கு செலவிடப்படும் அடிப்படையான அனைத்து செலவினங்களும் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் ஒதுக்கப்பட்டது, ஆனால் சாமி அலங்கார செலவை மட்டும் கட்டளைக்காரர்கள் ஏற்று நடத்துவார்கள்.

8. மேற்படி திருவிழா நடத்துவதற்கு ரூ.5 இலட்சம் மட்டும்தான் செலவாகுமென்று நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும், குறைந்தபட்சம் ரூ.25-30 இலட்சம் மேற்படி திருவிழாவிற்கு செலவிடப்பட்டது என்றால் சரியல்ல. நான் உண்மையை மறைத்து தவறான சாட்சியத்தை அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாவக்குறிச்சி மாரியம்மன் கோவிலில் எந்த திருவிழா வருடங்தோறும் நடைபெறுகிறது என்றால் கூழ் ஊற்றும் திருவிழா மட்டும் நடைபெற்று வருகிறது. மேற்படி திருவிழாவிற்கு ஊர் பொதுமக்கள் பூஜை பொருள்கள் அடங்கிய சிறப்பு தட்டுக்களை கொண்டு வந்து படைத்து எடுத்துச் செல்வது வழக்கம் என்றால் சரிதான். மேற்படி திருவிழா நான் பணியேற்ற பின்பு எத்தனை முறை நடைபெற்றது என்றால் 2 முறை நடைபெற்றது.

9. நாவக்குறிச்சி கிராமத்தில் கரைக்காரர்களை நாட்டாமை என்றும் அழைப்பார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. மேற்படி திருவிழாவை கரைக்காரர்கள்தான் முன்னின்று நடத்தினார்கள் என்றால் கரைக்காரர்களும், ஊர்பொதுமக்களும் சேர்ந்துதான் நடத்தினார்கள். நாவக்குறிச்சி அய்யனார் கோவிலில் பூசாரி யார் என்றால் பொன்னுசாமி என்பவர் பூசாரியாக இருந்து வருகிறார். அதேபோல் மாரியம்மன் கோவிலுக்கு பூசாரி யார் என்றால் சுப்ரமணி என்பவர் பூசாரியாக இருந்து வருகிறார். மேற்படி பூசாரிகளுக்கு எங்கள் அலுவலகத்திலிருந்து சம்பளம் வழங்கப்படுகிறதா என்றால் இல்லை. மேற்படி பூசாரிகளுக்கு நாட்டாமைதாரர்கள்தான் சம்பளம் வழங்கி வருகிறார்கள் என்றால் இல்லை.

10. நாவக்குறிச்சியில் உள்ள முத்தையா (எ) வடகரையான், மலையம்மன் கோவில்

திருவிழாக்களில் நான் கலந்து கொண்டேனா என்றால் இல்லை. நாவக்குறிச்சியில் அமைந்துள்ள திருக்கோவில்களுக்கு பிரதிவாதிகளான நாட்டாமைக்காரர்கள்தான் திருவிழாக்களை நடத்தி வருகிறார்கள் என்றாலும், நாங்கள் பெயரளவில்தான் செயல்பட்டு வருகிறோம் என்றாலும் சரியல்ல. மேற்படி கோவில்களின் திருவிழாக்களை பற்றி தெரியாமல் யூகத்தின அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

முடிவு நேரம்: 01.05 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

sd/-D. Jansi Rani
Additional District Munsif, Attur

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.558/2004, Dt.07.08.2025.